*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*28 09 2025 SUNDAY   7 15 AM*
*ஆகாஷவாணி – <u>செய்திகள்</u>*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

1. *பீகார் மாநிலத்தில் உள்ள Gokul Jalashay மற்றும் Udaipur Jheel பகுதிகள் ராம்சார் நிலங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது பெருமைக்குரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*
2. *பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*
3. *தமிழகத்தின், கரூர் மாவட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, உயிரிழந்த 39 பேரின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*
4. *நீதி விரைவாக கிடைக்கவும். நீதிமன்றங்களின் சுமையை குறைக்கவும், சமரச நடைமுறைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு.B.R. Gavai வலியுத்தியுள்ளார்.*
5. *உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.*

*>>>>>><<<<<<*

*பீகார் மாநிலத்தில் உள்ள Gokul Jalashay மற்றும் Udaipur Jheel பகுதிகள் ராம்சார் நிலங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது, நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள பதிவில், மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவை பகிர்ந்துள்ளார்.*

*நீடித்த வளர்ச்சிக்கு ஈரநிலங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறியுள்ளார்.*

*சுற்றுச் சூழல் பாதுகாப்பில் முன்னணி மாநிலமாக பீகார் உருவெடுத்து வருவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*நாட்டின் வளர்ச்சிக்காக பிஜேபி தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.*

பாட்னாவில் அக்கட்சி தொண்டர்களிடையே உரையாற்றிய அவர், தேர்தலில் வெற்றிபெறுவதற்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளும் பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டும் என்று கூறினார்.

பீகார் மாநில சட்டப்பேரவையில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறுவதுடன், கடந்த தேர்தலில் தோல்வியடைய தொகுதிகளில் வெற்றி பெறுவதற்கு தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்று திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களையும், எவ்வித நிபந்தனையும் இன்றி உலக நாடுகள் நிராகரிக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா, பிரேஸில், தென்னாப்பிரிக்க நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், தீவிரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில், இரட்டை நிலைப்பாட்டை உலக நாடுகள் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு, தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள், முழுமையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

உள்ளூர் தயாரிப்புகளுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக் கொண்டுள்ளார்.

பீகார் மாநிலம், பாட்னாவில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அமைச்சர், மத்திய மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்கள் பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று மக்கள் கருதுவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

*நாடுமுழுவதும் BSNL நிறுவனம் மூலம், 4ஜி மொபைல் சேவைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.*

*ஒடிசாவில் நடைபெற்ற ஒரு லட்சம் மொபைல் சேவைகளை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில், காணொலி மூலம் கலந்து கொண்ட அவர் இவ்வாறு கூறினார்.*

*பிரதமரின் தொலைநோக்குப் பார்வையின் கீழ், மொபைல் சேவைகளை வழங்குவதில் குறிப்பிடத்தக்க சாதனை படைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.*

*4ஜி அலைக்கற்றை மொபைல் சேவைகளை வழங்குவதில் உலகில் ஐந்தாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.*

>>>>>><<<<<<

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பீகார் செல்கிறார்.*

*பாட்னாவில் உள்ள லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயன் நினைவிடத்தில் அவர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.*

*பின்னர், சாகித்ய அகாடமியில் நடைபெறும் நிகழ்ச்சியில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்று உரையாற்றுகிறார்.*

>>>>>><<<<<<

*பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.*

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

சமரச நடைமுறைகளை அமல்படுத்துவதில் சட்டத்துறை அதிகாரிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி B.R. Gavai தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் இரண்டாவது தேசிய சமரச மாநாட்டை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நீதி விரைவாக கிடைக்கவும். நீதிமன்றங்களின் சுமையை குறைக்கவும், சமரச நடைமுறைகளை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

நீதிபதிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம், சமரச நடைமுறைகளை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும் என்று திரு. B.R. Gavai தெரிவித்தார்.

>>>>>><<<<<<

அஸ்ஸாமில் ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அம்மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், Tinsukia, Charaideo, Sivasagar ஆகிய 3 மாவட்டங்களில் இந்த சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும், இது அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தின், கரூர் மாவட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 10 குழந்தைகள், 17 பெண்கள் உள்பட 39 பேர் உயிரிழந்தனர்.

இதில் காயமடைந்த ஐம்பதுக்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கரூரில் தவெக தலைவர் திரு விஜய், பிரச்சாரம் மேற்கொண்ட போது மின்தடை ஏற்பட்டதையடுத்து, அங்கு கூடியிருந்த மக்கள் பதற்றம் காரணமாக வெளியேற முற்பட்டபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில், இந்த துயர சம்பவம் நேரிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரூரில் உயிரிழந்தவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. மு.க.ஸ்டாலின், தமிழக வரலாற்றில் இதுவரை நடைபெறாத துயர சம்பவம் இது என்று குறிப்பிட்டார். இதுபொன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாக திரு. மு.க. ஸ்டாலின் கூறினார்.

முன்னதாக, மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள், தமிழக ஆளுநர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, இந்த துயர சம்பவம் குறித்து அறிக்கை அளிக்குமாறு தமிழக அரசை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

குஜராத், கொங்கன், கோவா, மஹராஷ்ட்ரா ஆகிய இடங்களில் கன முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், விதர்பா, மேற்குவங்கம், சிக்கிம், ஜார்க்கண்ட் மற்றும் அந்தமான் – நிகோபார் தீவுகளில் அடுத்த *3* நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா, உத்தரபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் அடுத்த *4* நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், கர்நாடகா மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

உலக பாரா தடகள போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் உயரம் தாண்டுதல் பிரிவில் *Shailesh Kumar* தங்கப்பதக்கத்தையும், *Varun Singh* வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் *400* மீட்டர் ஓட்டப்பிரிவில் *Deepthi Jeevanji* வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

ஆசிய கோப்பை *20-20* கிரிக்கெட் போட்டியின், இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறும் இப்போட்டி, இரவு *8* மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

*17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில், இந்தியா பட்டம் வென்றது.*

*கொழும்பில் நேற்று நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான இறுதியாட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல் அடித்திருந்த நிலையில், பெனால்டி ஷூட்டவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் இந்தியா 4-1 என்ற கோல்கணக்கில் பங்களாதேஷ் அணியை வென்று பட்டத்தை கைப்பற்றியது.*

***>>>>>><<<<<<***

*சீன சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – அமெரிக்காவின் Reese Stalder இணை பட்டம் வென்றது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-2, 2-6, 10-7 என்ற செட்கணக்கில் தைவானின் Tsung Hao Huang – தென்கொரியாவின் Uisung Park இணையை வென்றது*

***>>>>>><<<<<<***

*லடாக்கில் நடைபெற்ற மகளிர் ஐஸ் ஹாக்கிப் போட்டியில், இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.*

***>>>>>><<<<<<***